புதுமலர்: 10 ஆடி - ஆவணி இதழ்: 04

# அனல்

இணை ஆசிரியர்கள்

யோ.நிக்ஷன்

வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.07.2013

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - எதற்கு முக்கியத்துவம்?
- வாலிபர் வளாகம் - அம்புகள்
- அன்புகூர்ந்தார்
- பெண்கள் பக்கம் - திருமதி லோத்து
- பக்தர்களின் பயிலகம்
- நற்செய்தி - அதிபதிக்கு ஓர் அதிபதி தேவை
- குறுக்கெழுத்துப் போட்டி - 56
- உன்னை பாராட்ட முடியுமா?
- அருட்பணியாளர் சரிதை - சார்ளஸ் தெ ஃபூக்கோ
- மூவரி முத்துக்கள்
- வினா விடை - 58
- படித்ததில் பிடித்தது
- அனலின் ஆன்மீக விருந்து - "கண்கள் திறக்கப்பட வேண்டும்"


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்



**கிறிஸ்துவுக்குள் அன்பான அனல் வாசக உள்ளங்களுக்கு!**

**உள்ளத்தின் ஆழத்திலிருந்து அன்பு வாழ்த்துக்கள்.**

என்றுமே மாறாத எமதருமை ஆண்டவர் உங்கள் மேல் வைத்த கிருபையின் அளவுக்கு ஈடாக எதை நாம் கொடுக்கப்போகின்றோம். அவர் உன்னிடம் கேட்பது உன்னையே. **அழகிய உலகத்தின் நாற்றத்தில் இருந்து உன்னை தூக்கினாரே, அதற்கான ஈடாக ஜீவ பலியாய் நாம் மாறுவதே ஏற்ற செயல்.**

சுத்திகரிக்கப்பட்டவைகள் சுத்தமானதிலேயே பேணப்பட வேண்டும். கிறிஸ்துவினாலே நீ சுத்திகரிக்கப்பட்டபடியால் பரிசுத்தராகிய அவருக்குள்ளேயே நீ அர்ப்பணிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். அவரால் நீ அடைந்த தூய்மையை உனக்கு மறைத்து, அதற்கு ஈடாக எதை உனக்கு உலகம் காண்பித்தாலும் அதிலே சறுக்கி விடாதே.

**இவ் இறுதிக் காலத்திலே உன்னைத் தம் பிள்ளையாக மாற்றியவருக்கு நீ பிள்ளையாய் இருக்க அறிந்து கொள். தேவனுடைய வசனம் போதிக்கும் பாதையை ஒரு போதும் மாற்ற வேண்டாம்; எல்லைக் கோடுகளைத் தாண்ட வேண்டாம்; பெருமை கொள்ள வேண்டாம்.**

தாழ்மையைத் தரித்தவர்களாய் நடவுங்கள், கர்த்தர் உங்களை தாங்குவார்.

**எபிரேயர் 3:13-14 (13.) உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். 14. நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்.**

— ஆசிரியர் —




# ஏதற்கு முக்கியத்துவம்?

யோசவ் என்றொருவர் இருந்தார். அவருக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவனுக்கு டயஸ் என்றும் இளைய வனுக்கு றைரஸ் என்றும் பெயர் வைத்து மகிழ்ந்தார். தனது இரண்டு பிள்ளைகளுக்கும் தேவையான அனைத்து காரியங்களையும் கொடுத்து நன்றாக வளர்த்து வந்தார். இவ்வாறு அவர்கள் வளர்ந்து வரும் போது அவர்களின் குணநலன்கள் எதிர்விதமாக அமைந்தது.

அதாவது, மூத்தவனாகிய டயஸ் காலையில் எழுந்ததும், தனது உடலை கட்டுடன் பேணுவதிலும், உடற்பயிற்சி செய்வதிலும், தன்னை அழகுபடுத்துவதிலும், அதற்குரிய புத்தகங்களை வாசித்து அதன்படி செய்வதிலும் ஈடுபடுவதுடன் தேவையற்ற படங்களை தன் படுக்கை அறையில் ஒட்டி அதனை ரசிப்பதிலும் ஈடுபட்டு வந்தான். அத்துடன் தன்னை மற்றவர்கள் பார்க் வேண்டும் என்று அவர்களை வசீகரப்படுத்து வதிலேயே தன் நேரத்தை செல விட்டு வந்தான்.



ஆனால் இளையவனாகிய றைரசோ முற்றிலும் மாறுபட்டவனாக, காலையில் எழுந்ததும் தேவனோடு நேரத்தை செலவிட்டு, ஆவிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்தியது டன் தன்னுடைய படிப்பிலும் ஈடுபடு வான். அத்துடன் வேத வசனங்களை

தன் படுக்கை அறையில் ஒட்டி அதனை தியானிப்பதுடன் வேண்டத்தகாத காரியங்களிலும் ஈடுபடாது வந்தான்.

தகப்பனாகிய யோசவ் எப்போதும் தன் மூத்த மகனாகிய டயசைக் குறித்து பெருமைப்பட்டுக் கொள்வார். *"புலிக்கு பிறந்தது பூனையாகுமா"* என்றும் சொல்லிக் கொள்வார். இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டிருக் கும் போது: பிள்ளைகளின் குணங்களில் பெரிதான மாற்றம் ஏற்பட்டது. டயசின் உள்ளான மாம்சக் குணங்கள் சிறிது சிறிதாக வெளிக்காட்ட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் இதனை யோசவ் சாதாரணமாக எடுத்துக் கொண்டார். ஆனால் இது பெரிதாகி டயசின் கல்லூரி வாழ்க்கை நீதிமன்றுக்கும் சிறைச் சாலைக்கும் மாற்றப்பட்டது. **இவ் வேதனைகள் முட்களாய் குத்த ஆரம்பித்து. குடும்பத்தின் பெயர் வீதிகளில் இழிவாக பேசப்பட ஆரம்பிக்கின்றது. சோலைவனம் பாலைவனமாகவும், சந்தோஷம் துக்கமாகவும் மாற்றப்பட்டது.**




ஆனால் இந்த சூழ்நிலையில் தகப்பன் ரைரசை பார்க்கின்றார். அவன் மிகுந்த சமாதானத்துடன் தன் தகப்பனுக்கு ஆறுதல்கூறி வேத வசனத்தை எடுத்து அவருக்கு காண்பித்தான்.

**கலாத்தியர் 6:8 மாம்சத்திற் கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.**

ஆம்! அருமை சகோதரர்களே, அந்த இரண்டு சகோதரர்களைப் போல நம் ஒவ்வொரு வருடைய உள்ளத்திலும் மாம்சத்திற்குரிய காரியங்களும், ஆவிக்குரிய காரியங்களும் காணப்படும். நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுத்து காரியங்களை செய்கின்றோமோ அது வளர்ந்து ஒரு நாள் கனி கொடுக்கும். எனவே, நீங்கள் மாம்சத்தையா, ஆவிக்குரிய காரியங்களையா வளர்க்கின்றீர்கள்?. வெளி மனுஷனின் பெலத்தைவிட ஆவிக்குரிய உள்ளான மனுஷனின் பெலனே முக்கியம் என்பதனை மறந்து விடாதீர்கள்.!

வை. ஷமல்




இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் இனிய வாழ்த்துக்கள்!.

**சங்கீதம் 127:4-5 (4.) வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். 5. அவைகளால் தன் அம்பறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்.**

வாலிப வயது அது மிகவும் இனிமையானதும், பெலனும், அறிவும், ஆற்றல்களும் அதிகமாக தன்னகத்தே கொண்ட பருவமாகும். யுத்த புருஷனுடைய (பராக்கிரமசாலி) கைகளில் இருக்கும் கூர்மையாக்கப்பட்டு எந் நேரத்திலும் பாவிப்பதற்கு தயாரான நிலையில் இருக்கும் அம்புக்கு சமானம்.

அவைகளைச் சேர்த்து யுத்தத்தில் அம்பை மிக வேகமாக எடுக்கக் கூடியதும் வசதியான இடமாக தோள்பட்டையின் பின்புறப் பக்கமாக அவற்றை அம்புக் கூடையில் போட்டு வைப்பான். **நன்றாக துலக்கப்பட்ட (கூர்மையாக்கப்பட்ட) அம்புக் கூடையில் தனக்கு நியமிக்கப்பட்ட வேளை வரும் வரை பொறுமையுடனும், ஆவலுடனும் வீரனின் தோள் மேல் இருக்கும்.** சடுதியாக

தன் மீது வீரனின் கை படும் போது அதிகமான பரவசமும் குதூகலமும் அடையும். **யுத்த வீரன் அம்பை தன் வில்லிலே தொடுத்து இலக்கை**



**அடையும்படியாக அதிகளவான விசையினைக் கொடுத்து அம்பை நாண் ஏற்றுவது ஓர் அற்புதமான செயலாகும். காரணம்; இலக்கை சரியாக சென்றடைய வேண்டும் (நோக்கத்தை நிறை வேற்ற) என்ற ஒரே ஒரு வாஞ்சையாகும்.**

**உன் இளமையைக் குறித்து ஒருவனும் அசட்டை பண்ணாதபடி துலக்கப்பட்ட அம்பாக பலவான்களை மகிழ்ச்சியும், தைரியமும் ஊட்டக் கூடியவனாக(ளா) நீ இருக்கின்றாயா?** சத்துருக்களைச் சந்திக்கும் போது கூட யுத்தவீரன் பயப்படமாட்டான். காரணம்; தன் அம்புக் கூடையை மிக நேர்த்தியான அம்புகளால் நிரப்பியிருக்கின்றேன். அவைகள் அனுப்பும் காரியமாக வாய்க்கும் என்ற வால வயதின் குமாரரைக் குறித்த ஒரே நம்பிக்கையாகும்.

## பகலில் பறக்கும் அம்பு

ஒருவனின் வாழ்வை தேவனை விட்டும் தேவராஜ்யத்தை விட்டும் அழித்து ஒழிப்பதற்காக பகலில் பறக்கும் அனேக அம்புகள் வித்தியாசம் வித்தியா சமான வழியில் தெரிந்தோ, தெரியாமலோ பகல் முழுதும் நம்மை நோக்கி வருவதை வேதம் சுட்டிக்காட்டுகின்றது.

> நீ தப்புவிக்கப்படுவதற்குரிய ஒரே ஒரு வழி மாத்திரமே உண்டு. சிலுவையின் நிழலின் கீழாக வந்து வாழ்வை அர்ப்பணித்து செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவது ஒன்றேயாகும்.

**நீ தப்புவிக்கப்படுவதற்குரிய ஒரே ஒரு வழி மாத்திரமே உண்டு. சிலுவையின் நிழலின் கீழாக வந்து வாழ்வை அர்ப்பணித்து செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவது ஒன்றேயாகும்.**

### உன்னுடைய நேரத்திற்கு உண்மையாயிரு

ஒவ்வொரு மணியும் தேவன் உனக்கு கிருபையாய் தந்த வாழ்வின் நிமிடமாகும்.

### உன்னுடைய வேலைக்கு உண்மையாயிரு

நீ எங்கு வேலையில் அமர்த்தப்பட்டுள்ளாயோ அங்கு தேவ பிள்ளை போல் தேவ குண இயல்புகளை வெளிப்படுத்து. கூடவே நேர்மையாய் சிறிய காரியத்திலும் நடந்து கொள்.

## உனக்கு கிடைக்கும் பணத்திற்கு உண்மையாயிரு

உனது கரத்தில் வரும் ஒரு ரூபாய்க்கு கூட நீ தேவனுக்கும் உன் குடும்பத்திற்கும் உண்மையாயிரு.

## உன்னுடைய செலவில் உண்மையாயிரு

வீண் செலவிற்கும்; தவறான வழிகளிலும் பணத்தை கொடுக்காதே. உக்கிராணக்காரனாயிரு.

## உன்னுடைய குடும்பத்திற்கு உண்மையாயிரு

பெற்றாருக்கு கீழ்ப்படி (பெற்றாருக்கு தெரியாமல் எந்த இடத்திற்கும், எந்த காரியத்திலுமோ ஈடுபடாதே). அப்பொழுது பகலின் அம்புக்கு தப்புவிக்கப்படுவாய்.

## தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிரு

ஒவ்வொரு நாளும் வாசித்து, தியானித்து, கீழ்ப்படி.

## ஈரலைப்பிளக்கும் அம்பு



போர்த்திபாரின் மனைவியின் காமப்பசிக்கு இரையாகி விடவில்லை பரிசுத்தவான் யோசேப்பு. பரிசுத்தத் திற்காய் சீக்கிரமாய் பறந்து விட்டான். ஆனால் நீதிமொழிகள் 7ம் அதிகாரத் தில்; ஓர் புத்தியீன வாலிபனைக் கண்டபெண் கணவன் தூர தேசத்திற்கு வியாபாரத்திற்கு சென்ற போது காமப்பசிக்காக தந்திரமான, நயவஞ்சகமான, இச்சகமான வார்த்தைகளைப் பேசி அவனை நயம்பண்ணி இறுதியாக சம்மதிக் கவும் செய்துவிட்டாள். (பாதுகாப்பான, ஆரோக்கியமான, பேச்சுப்போல இருந்தாலும் பாவத்திற்கு சம்மதிக்காதே)

**பால் உறவில் ஒழுக்கக்கேடாய் நடப்பவர்களுக்கு (திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்) வேதனையாலும், மனவருத்தத்தினாலும், குற்ற உணர்ச்சியையும் தேவன் நியமித்து இருக்கின்றார். திருமணத்திற்கு முன் ஒழுக்கமில்லாத பாவ வாழ்க்கையும்; திருமணத்தில் உண்மை இல்லாமையும் பல தீய விளைவுகளை உன் வாழ்வில் நிச்சயமாக கொண்டு வரும்.**

முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும் போது நீ துக்கித்து, போதகத்தை நான் வெறுத்தேனே.... என்று கதறி கதறி வேதனைப்படுவாய்.

**தவறான படங்களைப் பார்ப்பதும், அவற்றை வாழ்வில் நிகழ்த்தத் துடிப்பதும், மறைப்பதும் தேவன் அறிவார். நிச்சயமாக இந்த சத்தம் உனக்கு தேவன் அளிக்கும் அன்பின் மனம் திரும்புதலுக்கான தவணையின் கட்டளைச் சத்தமாகும் சகோதரனே! சகோதரியே!.**

## படுக்கை அறையைக் குறித்த வர்ணிப்பு...

புருஷன்/மனைவி வீட்டில் இல்லை; தூர போனார்(ள்) என்கிற தெளிவும், காசுப்பையை கொண்டு போனார்(ள்), இப்போ வரமாட்டார்(ள்); சில நாட்கள் பிந்தி வருவார்(ள்) என்கிற நிச்சயமும் இன்னும் அதிகமான இனிய சொற்கள். அவனின் மனதையும் மாம்சத்தையும் இசையப்பண்ணி இறுதியாக அம்பு அவன் ஈரலைப் பிளந்தது. அவனது இரத்த உற்பத்தி இடமான ஈரலிலே தாக்கம் உண்டாகிவிட்டது.

அழிவு அவனின் உள்ளே ஏராளமாய் தாராளமாய் கொட்டப்பட்டது. (பாலியல் பாவங்களில் ஈடுபடுபவர்கள் உடனடியாக மரிப்பது இல்லை) குறைந்தது HIV+ தென்படுவதற்கு ஏறத்தாள 10 வருடங்களா வது எடுக்கும். **உள்ளக தொகுதி அனைத்தையும் கிருமிகள் அழித்து இரத்த அணுக்களை மேற் கொண்டு கிரியை செய்ய ஆரம்பித்து விடும் (ஈரலில் பாதிப்பு (பழுது) ஏற்படுமிடத்து குணமாக்குவது மிக கடினம்).**



## பொல்லாங்கன் எய்யும் அக்கினி அம்பு

நமக்கு மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல; வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவியின் சேனையோடு போராட்டம் உண்டு. சத்துருவானவன் எறிகிற அக்கினி அம்புகளை அணைத்து விட வேண்டும் விசுவாசம் என்னும் கேடயத்தினால். **வாலிப பருவத்தின் அனைத்து மேன்மையையும் அறிந்த சத்துருவானவன் எப்படியாவது தன்னுடைய தீய, எரியூட்டும், அழிக்கும், கெட்ட அம்பின் மூலம் சம்பலாக்க (வாழ்வை தொலைத்துக் கட்ட) முயற்சிக்கின்றான்.** இடமளிக்காதே!. ஆவிக்குரிய போர் வீரனுக்குரிய அனைத்து போர் உபகரணங்களையும் அணிந்தவனாக

போர்க்களத்திலே நில்; அப்போது மாத்திரமே வெற்றி பெற முடியும். சரியான பாதுகாப்பு இன்றி, முழு ஆயத்தத்துடனும் நீ நிற்காவிட்டால் சத்துருவானவன் எய்யும் அக்கினி அம்பானது உனது உடலில் ஏதாவது ஒரு பகுதியில் பட்டால் போதும் அது முழு உடலையும் அழிக்க போதுமான நெருப்புக் கொண்டதாக ஒவ்வொரு அவயவத்தையும் கெடுத்து இறுதியில் உன் ஜீவனுக்கே கண்ணியாய் மாறிவிடும்.

## உத்தமன் உரியா சத்தியத்திற்கு சாய்ந்தான்.

வில் வீரர் அலங்கத்திலிருந்து போர் சேவகர் மேல் எய்தார்கள். அது உத்தம உரியாவின் வாழ்வை பதம் பார்த்தது.

அர்ப்பணிப்பான, தூய்மையான, கிறிஸ்துவுக்காக கனதியாக வாழ்வுகளையும், அம்புகள் சந்தித்து உயிரை வாங்கினாலும் அவைகள் நித்தியத்தின் பிரகாசமுள்ள நட்சத்திரங்களாக ஜொலிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

*தூய்மையாவோம்! துணிந்து செல்வோம்!! இயேசுவுக்காய்!!!.*


**போதகர் வேதநாயகம் சுமணன்.**

## வினா விடை - 57 சரியான விடை எழுதியவர்கள்

01. அ.சுதா - வேரவில்
02. அ.துர்க்கா - காரைநகர்
03. அ.எஸ்தர் - காரைநகர்
04. ச.மாக்றேட் - வேரவில்
05. மே.கிளேரா - நாவற்குழி
06. மு.சுபாசினி டனி - நாவற்குழி

## குறுக்கெழுத்துப் போட்டி - 55 சரியான பதில் எழுதியவர்கள்

01. மு.சுபாசினி டனி - நாவற்குழி
02. த.குமுந்தராசா - நாவற்குழி
03. மே.கிளேரா - நாவற்குழி
04. செ.எலிசம்மா - நாவற்குழி
05. அ.எஸ்தர் - காரைநகர்
06. அ.துர்க்கா - காரைநகர்
07. ப.யோசியா - புங்குடுதீவு
08. ப.ஜக்சனா - புங்குடுதீவு




நேசிக்கக் கூடியவர்களை நேசிக்கவும்; எமக்கு இசைவாய் நடப்போரை அன்பு கூர்வதும் மிகவும் இலகுவாகும். பிராணிகளிலும், பறவைகளிலும் கூட அன்பின் ஒவ்வொரு வெளிப்பாடுகளைக் காணலாம்.

தகப்பன் மகனையும்; பிள்ளைகள் பெற்றோரையும்; மாணவர்கள் ஆசிரியர்களையும்... இவ்விதமாக உறவுகளுக்கிடையேயான அன்பும் நாம் வாழ்க்கையில் காண்பதாகும். சிநேகத்துவ அன்பும் கூடவே.



***முற்றிலும் மாறுபாடான ஓர் அன்பைக் கூற விரும்புகின்றேன்; துரோகம் விளைவித்து, கட்டளையை மீறி பரிசுத்த குலைச்சலை உண்டாக்கி தேவனின் நேச குரலுக்கும் அவர் அனுப்பிய செய்திகளுக் கும் செவி கொடுக்காமல் செய்தியைக் கொண்டு வந்த மனிதர்களையும் விரட்டியும் கொலை செய்த பாதகமான இவ் உலகைக் கூட நேசிக்கும் அன்பு அது எதற்கும் ஈடாகாது.***

## அஃபே அன்பு (தெய்வீக அன்பு)

பிரதிபலன் எதையும் எதிர்பார்க்காமல் எப்பேற்பட்ட நிலையில் தூரம் போய், சீர்கெட்டு வாழ்ந்தாலும் நேசிக்கும் விலையேறப் பெற்ற அன்பு.

**தேவன்; தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். யோவான் 3:16**

**இயேசு கிறிஸ்துவை விசுவாசி, உன் வாழ்விலும் நித்திய ஜீவனுக்கான கனிகளும், அன்பு கூருதலும் வெளிப்படும்.**

ரேமா



# திருமதி லோத்து
# Mrs. Lot

**பெண்கள் பக்கம்**

**லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் - லூக்கா 17:32**

இன்று நம்மில் பலர் நினைவு தினங்களை நினைப்பதுண்டு. திருமண நாள், பிறந்தநாள், ஆசிரியர்நாள், இறந்தநாள், காதலர்நாள் மற்றும் தாய் தகப்பன்மார்களை நினைத்து கனப்படுத்தும் நாள் என பல நினைவு தினங்களை நினைப்பதுண்டு.



ஆனால் பரிசுத்த வேதாகமம் எங்களுக்கு ஒரு எச்சரிப்பை அறிவிக்க நிறுத்தியிருக்கும் ஒரு நினைவுக்கல் தான் **லோத்தின் மனைவி.** அவளுடைய வாழ்க்கை அநேகருக்கு எச்சரிப்பாய் இருக்கின்றது. வேதாகமத்தில் அவளுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அவள் ஒரு நீதிமானின் மனைவி.

**11பேதுரு 2:8 நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்து** என வாசிக்கிறோம். ஆனால் அவளோ தன்னை நீதிக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. ஆபிரகாம் ஆஸ்திகளையுடைய சீமானாயிருந்தான். ஆபிரகாமுடனே வந்த லோத்துவிற்கும் ஆடு, மாடுகளும், கூட்டங்களும் இருந்தன. ஆகவே திருமதி லோத்து ஒரு சீமானின் மனைவி எனலாம். எனவே அவள் ஒரு சீமாட்டி.

**இவள் தேவ தூதரை உபசரிக்கும் சிலாக்கியத்தை பெற்றாள் - ஆதியாகமம் 19:3.** உபசரிப்பை நினைத்தாள்;

ஆனால் தேவ தூதனின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறந்து போனாள்.

தெரிவு செய்ய வேண்டிய நேரம் வந்த போது லோத்து; **ஆதியாகமம் 13:13 கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும், எகிப்து தேசத்தைப் போலவும் இருந்ததை** தெரிவு செய்தாள். அதாவது "போல" என்ற போலியைப் பற்றிக் கொண்டான். சோதோமுக்கு நேரே கூடாராம் போட்டான். சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள். திருமதி லோத்து அதை சிந்திக்கத் தவறி விட்டாள். லோத்தின் மனைவியின் உள்ளத்தில் இப்போ சோதோம் குடி கொண்டு விட்டது.



**தேவனின் இரக்கத்தினால் ஸ்தலத்தை அழிக்க முன்பதாக லோத்தின் குடும்பத்தை வெளியே கொண்டு போய் தேவதூதன் அவர்களுடைய கைகளைப் பிடித்து பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் விட்டு; ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டு பாராதே, இந்த சமபூமியில் நில்லாதே, ஓடிப்போ என்றார்.** ஆனால் **ஆதியாகமம் 19:26 அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள்**. ஏன் அவளுக்கு இந்த நிலமை வந்தது என சிந்திப்போம். பின்னிட்டு பாராதே என்ற கட்டளையை அவளால் காத்துக் கொள்ள முடியவில்லை.

ஏன் பின்னிட்டுப்பார்த்தாள்? "போல" இருந்த போலியை நம்பி அவள் உள்ளத்தில் உலக ஆசை, இச்சை இருந்தது. இதின் நிமித்தம் அவளால் இதில் இருந்து விடுபட முடியவில்லை. உப்புத்தூணானாள் திருமதி லோத்து. நீதிமானின் மனைவி, தேவ தூதர்களை உபசரித்தவள், சமாட்டி. ஆனால் அவளுடைய **வாழ்க்கை உப்புத்தூணாய் பிரயோசனமற்றதாய் போய்விட்டது. இதை வாசிக்கும் சகோதரியே லோத்துவின் மனைவிக்கு மனந்திரும்ப சந்தர்ப்பம் இல்லை. ஆனால் இன்றைக்கு தேவன் உனக்கு ஒரு சந்தர்ப்பம் தருகின்றார்.** உன்னுடைய வாழ்க்கையை நீ ஆராய்ந்து பார், தேவ கட்டளைகளைக் காத்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றாயா? சினிமா, நாடகம்

போன்றவற்றை பார்க்காமல் இருக்க முடியாமல், அவற்றை விட்டு விட முடியாமல் இருக்கின்றாயா? உலகப் பெண்கள் போல காட்சியளிக்க விரும்புகின் றாயா? நாகரீகம் உன் வாழ்க்கையில் இடம் பிடித்துவிட்டதா? உலக ஐஸ்வரி யங்களைத் திரும்பி பார்க்கின்றாயா? **யாக்கோபு 4:4 உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறியீர்களா?** கர்த்தருக்காய் விட்டு விட்ட காரியங்களில் திரும்பவும் உனக்கு நாட்டம் உண்டாகின்றதா? பொல்லா தவர்களுடனும், கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுடனும் உனக்கு ஐக்கியம் உண்டா?

**தேவனின் பாதையைப் பின்பற்றும் போது நெருக்கங்கள் இருக்கலாம்; ஆனால் நம்பிக்கை உண்டு. "போல" இருக்கின்ற போலிகளின் தேவ ஆசீர்வாதமும், உலக ஆசீர்வாதமும் கிடைப்பது போல தோன்றலாம். ஆனால் இறுதியில் இரண்டும் இழக்கப்படும் என்பதை மறந்துவிட வேண்டாம்.**

**தேவனின் பாதையைப் பின்பற்றும் போது நெருக்கங்கள் இருக்கலாம்; ஆனால் நம்பிக்கை உண்டு. "போல" இருக்கின்ற போலிகளில் தேவ ஆசீர்வாதமும், உலக ஆசீர்வாதமும் கிடைப்பது போல தோன்றலாம். ஆனால் இறுதியில் இரண்டும் இழக்கப் படும் என்பதை மறந்துவிட வேண்டாம். ஓடவேண்டிய பாதையில் ஓடாமல் வழிவிலகி ஓடினால் இறுதியில் ஜீவன் தப்ப ஓடிப்போக முடியாது.**



திருமதி லோத்து தன்னுடைய பாவ ஆசைகளை வாயினால் அறிக்கையிடவில்லை. ஆனால் இருதயத்தில் ஒளிந்தி ருந்தபடியால் தருணம் வந்த போது செய்கையினால் காண்பித்து உப்புத் தூண் ஆனாள். இன்றைக்கு உனக்கு கர்த்தர் ஒரு சந்தர்ப்பம் தருகின்றார். உன் இருதயம் எதினால் நிரப்பப்பட்டிருக்கின்றது என்று நீயே ஆராய்ந்து பார், இன்றைக்கு மனந்திரும்பு!. மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீ களைந்து போட்டு உன் உள்ளத்தில் புதிதான ஆவியை தரித்து நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள். **எபேசியர் 4:22-24.**

திருமதி. J.பிலிப்







11தீமோத்தேயு - சென்ற வார தொடர்ச்சி...

அன்பின் வாசகர்களே! இம் மாத அனலில் தீத்துவுக்கு எழுதிய நிருபம் புதிய பகுதியாக வெளிவருகின்றது.

"சுவிசேஷகனுடைய வேலையைச்செய்" இது தீமோத்தேயுவின் ஊழியத்தில் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்பதனையும் காட்டுகிறது. **இதனால் எல்லாப் பிரசங்கங்களும் பாவம், நரகம், ஆக்கினைத் தீர்ப்பு என இருக்க வேண்டும் எனக்கூறவில்லை.** பரிசுத்தவான்களுக்கும் போஜனம் தேவை. **பவுல் இங்கு சொல்ல முற்படுவது: தொலைந்த ஆத்துமாக்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.** இந்தப் பாரம் ஒரு ஊழியனிடத்தில் காணப்படவேண்டும்.

**இப் பொறுப்புக்குப் பின்னால் இருக்கும் காரணத்தையும் பவுல் கூறுகின்றான். 11தீமோத் 4:6-8.** பவுல் காட்சியை விட்டு மறையப் போகின்றான். தீமோத்தேயு அவன் இடத்தை எடுக்க வேண்டும். **பவுல் குறிப்பிடும் இத் தனிப்பட்ட சாட்சியில் அவன் மூன்று திசைகளில் பார்ப்பது தெரிகிறது.**

01. அவன் சுற்றிப் பார்க்கிறான். 11தீமோத்தேயு 4:6

**பவுல் தன் காலம் குறுகியது என உணர்ந்தான்.** ஆனாலும் **மரணத்தை நினைத்து அவன் நடுங்கவில்லை.** இரு பதங்கள்: 01. வார்க்கப்பட்டு 02. பிரிந்து போகிறேன். இது அவன் விசுவாசத்தை நம்பிக்கையை காட்டுகின்றது. **வார்க்கப்பட்டு - இது பலிபீடத்தில் பான பலியாக வார்க்கப் படுவதற்கு ஒப்பானது. உண்மையில் பவுல் கூறுவது என்னவென்றால்:** என் வாழ்க்கையை இயேசுவுக்குப் பலியாக நான் ஒப்புக் கொடுக்கப் போகிறேன். **நான் ஒரு ஜீவபலியாக இருந்தேன். இரட்சிக்கப்பட்ட நாள் முதல் கொண்டு அவரை சேவிக்கிறேன்.** இப்போது அந்த பலியை என் வாழ்க்கையை ஒப்புக்கொடுப்பதன் மூலம் பூர்த்தி செய்வேன்.

**பிரிந்து போகிறேன் – இது அநேக அர்த்தங்களைக் கொண்ட ஓர் அழகான பதம்.** இது நங்கூரத்தை உயர்த்தி கடற்பயணமாகுதலுக்கு ஒப்பானது. **பவுல் மரணத்தை; உலகத்தில் இருந்து விடுதலையாகி, நித்தியத் திற்குள் பயணம் செய்யும் சந்தர்ப்பமாகவே பார்த்தான்.** அடுத்து இவ் வார்த்தை கூடாரத்தைப் பெயர்ப்பதற்கும் அர்த்தமாகிறது. **இது IIகொரிந்தியர் 5:1–8 வசனங்களோடு ஒத்ததாக இருக்கிறது.**

அடுத்து ஒரு கைதியை கட்டு அவிழ்ப்பதையும் இது குறிக்கும். **பவுல் உண்மையில் விடுதலையைத் தான் எதிர்நோக்குகிறானே ஒழிய தண்டனையை அல்ல.** அடுத்து காளையின் நுகத்தை கழற்றுவது. **பவுல் அநேக ஆண்டுகள் கடின சேவையில் ஈடுபட்டிருந்தான்.** ஆனால் இப்போ அவன் எஜமான் அவனது நுகத்தை எடுத்துவிட்டு இன்னும் மேலான சேவைக்கு பதவி உயர்வு வழங்குகிறார்.

02. பவுல் பின்னோக்கிப் பார்த்தான் – IIதீமோத்தேயு 4:7

இங்கு பவுல் பின்நோக்கிப் பார்த்து தன் வாழ்வின் வடிவத்தைக் கூறுகின்றான். **இங்கு பவுல் மூன்று வித தோற்றங்களைக் காண்பிக்கின்றான்.** ஒரு நல்ல மல்யுத்த வீரனைப் போல நல்ல போராட்டத்தைப் போராடினான். **ஓர் ஓட்ட வீரனைப் போல வாழ்க்கை என்னும் ஓட்டத்தை வெற்றிகரமாக ஓடி முடித்தான்.** ஓர் நல்ல பணியாள் போல் தன் எஜமானின் வைப்பை (ஒப்புவித்ததை) உண்மையோடு காத்துக் கொண்டான்.

03. பவுல் முன்னோக்கிப் பார்த்தான் – IIதீமோத்தேயு 4:8

அந் நாட்களில் கிரேக்க ரோம விளையாட்டு வீரர்கள் வெற்றி பெறும் போது மலர்வளையம், மாலை, இலைக் கிரீடம் போன்றவை பரிசாக வழங்குவார்கள். **இங்கும் பவுல் கிரீடத்தைக் குறித்து பேசுகின்றான்.** எது எப்படி இருந்தாலும் பவுலுக்கு வாடிப்போகிற இலைகளால் செய்த கிரீடம் கிடைக்காது. அவனது கிரீடம் ஒருபோதும் வாடிப்போகாத நீதியின் கிரீடமாகவே இருக்கும். **இயேசு நீதியுள்ள நியாயாதிபதி. அவர் எப்போதும் சரியாகவே நியாயம் தீர்ப்பார்.**

ரோமாவில் பவுலின் நீதிபதிகள் நிதியுள்ளவர்கள் அல்ல. அப்படியிருந்தால் அவனை அவர்கள் விடுவித்திருப்பார்கள். **ஒன்று மாறி ஒன்றாக எத்தனையோ விசாரணை மன்றுகள் பவுல் ஏறவேண்டியிருந்தது.** ஆனால்இப்போதோ அவன்தன் கடைசி நியாயாதிபதியை சந்திக்க இருக்கின்றான். அது அவனுடைய கர்த்தர் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து. **நீங்கள் தேவனை சந்திக்க ஆயத்தமாக இருக்கும் போது மனிதர்களின் நியாயத்தீர்ப்புக்கு பயப்படவேண்டியதில்லை.** நீதியின் கிரீடம் உண்மையும் நீதியும் நிறைந்த வாழ்க்கைக்கும் சேவைக்கும் தேவன் கொடுக்கும் பரிசு.


04. உண்மையும் ஊக்கம் தளராமையும் - 11தீமோத்தேயு 4:9-22

ஏன் தீமோத்தேயு உண்மையும் ஊக்கமும் தளராதவனாய் இருக்க வேண்டும். இதற்கான பாதிவிடை 10ம் வசனம் கூறுகின்றது. **பவுலுடன் கூட இருந்தோரில் சிலர் உண்மையற்று இருந்தார்கள்.** பவுல் அவர்களில் தங்கி இருக்க முடியவில்லை. **தேமாவைப் பற்றி இங்கு குறிப்பிடப்படுகிறது. இந்தக் குறிப்பு அவனது சோகமாக தவறுதலைக் காட்டுகிறது.** இங்கு தேமா பிரிந்து போனான் என பவுல் கூறுகின்றான். **இதற்கான காரணத்தையும் பவுல் கூறுகின்றான்: இப் பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து...** இது உண்மையற்ற தன்மையும் ஊழியத்தின் மீதுள்ள ஊக்கம் தளர்வு இல்லாமல் போவதையும் காட்டுகிறது.

**ஆனால் இப் பகுதியில் பவுல் தீமோத்தேயுவை தன்னிடத்தில் சீக்கிரம் வரும்படி அழைக்கின்றான்.** ஏன்? தீமோத்தேயு தவறமாட்டான் என அவன் அறிந்திருந்தான்.

**குறிப்பு:- இத்துடன் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாவது நிருபம் முற்றுப் பெறுகின்றது. இது உங்கருக்கு ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என்று நம்புகின்றோம். நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எங்கருக்கு எழுத மறவாதீர்கள்.**

---




**எபேசுவிலே தீமோத்தேயு ஊழியம் செய்கையில் தீத்து கிரேத்தா தீவில் ஊழியம் புரிந்து வந்தான்.** இந்த தீத்துவும் பிரச்சினைகளை எதிர்நோக்கியவனாக இருந்தான். **இதில் இருந்த சபைகளுக்கு தேவன் எதிர்பார்க்கும் தகமையுள்ள தலைவர்கள் தேவை என்பது தெரிகின்றது.**

சபைகளில் இருக்கும் ஒவ்வொருவரும் மேய்க்கப்பட வேண்டும். **சுபாவத்தின்படி பார்க்கையில் கிரேத்தா தீவார் மத்தியில் ஊழியம் புரிவது மிகக்கஷ்டம் - தீத்து 1:12-13.** தீத்துக்கு இவர்களோடு வேலை செய்ய பொறுமையும் அன்பும் தேவையாக இருந்தது. **இந்த 1ம் அதிகாரத்தில் தீத்து நிறைவேற்ற வேண்டிய மூன்று பொறுப்புக்களைப் பவுல் நினைவுபடுத்துகிறான்.**

## 01. தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கி – தீத்து 1:1–4

இவ்விதமான ஒரு அறிக்கை ஊழியத்திற்கும் தேவனுடைய வார்த்தைக்கும்இடையில்இருக்கும்தொடர்பினைக்காட்டுகின்றது. **அத்தோடு இப் பகுதியில் எழுதப்பட்டுள்ள நான்கு சொற்கொடரையும் அவதானிக்க வேண்டும்.**

01. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விசுவாசப்படி-தீத்து 1:3

பவுலின் ஊழியம் தேவனுடைய வார்த்தையினால் ஆளப்பட்டது. **பவுல் "தேவனின் அடிமை" இயேசுவினால் அனுப்பப் பட்டவன்.** இவனது ஊழியத்தின் நோக்கம் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்வதே. **இந்த சத்தியத்தின் உடற்கூறு** (Body of Truth) **தேவனுடைய வார்த்தையில் அடங்கி இருக்கிறது.** இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். **இவர்களுக்கு விசுவாசம் உண்டாக வார்த்தை சொல்லப்பட வேண்டும்.**

02. தேவ பக்திக்கு ஏதுவான சத்தியம் – தீத்து 1:3

இந் நிருபத்திலும் தேவபக்தி ஓர் முக்கியமான அம்சம். **சுவிசேஷத்தின் சத்தியம் வாழ்க்கையை அவபக்தியில் இருந்து மாற்றும். அதாவது பரிசுத்த வாழ்க்கைக்கு.**

03. தேவனுடைய கட்டளைப்படி – தீத்து 1:4

இந்த ஊழியம் தேவனுடைய கட்டளையின்படியே நடக்கிறது. **மனிதனால் உண்டானது அல்ல.**

04. பொதுவான விசுவாசம் – தீத்து 1:1

"பொதுவான" எனக்கூறும் போது பொதுவாக வைத்திருப்பதையே அர்த்தப்படுத்துகிறது. **இந்த விசுவாசத்தை தேவனுடைய ஜனங்கள் அனைவரும் கொண்டிருக்கலாம்.** யூதா 3ல் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம் எனக்கூறப்படுவதைக் காணலாம். **இந்தப் பொதுவான விசுவாசத்தில் இருந்து விலகும் எச் செயலும் தப்பானது. இதை சபைகளிலே சகிக்கக்கூடாது.** இந்த நான்கு காரியங்களையும் பார்க்கையில் பவுல் தன் ஊழியத்தை தேவ வார்த்தையோடு சம்பந்தப்படுத்தியதைக் காணலாம். **அவனது அழைப்பும் பிரசங்கித்தலும் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்திலேயே தங்கி இருந்தது.** இவன் தீத்துவும் இந்த உண்மையை பற்றிப்பிடித்து தன் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு முக்கியமான இடம் கொடுக்க வேண்டும் என விரும்புகிறான்.

**போதகத்துவ நிருபங்களில் தேவனுடைய வார்த்தையை போதிப்பதைக் குறித்து** பவுல் **வலியுறுத்துகின்றான்.** எனவே உள்ளூர்ச் சபைகள் "வேதாகம பாடசாலையைப்" போல் தேவனுடைய வார்த்தையை கிரமமான முறையில் மக்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

**தொடரும்...**

*(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பருபன்)*




## மத்தேயு 8:5-10




**நா**ம் எந்த நிலையில் தேவனண்டை வந்தாலும் நம்முடைய தோற்றத்தையும் தாண்டி அவர் பார்க்கின்றார். **ஒரு மனிதன் பேசும் போது வெறும் முகஸ்துதியாகப் பேசுகிறானா? அல்லது இருதயத்தில் விசுவாசிக்கிற காரியங்களை உண்மையாய் பேசுகிறானா? என்பதை இயேசு அறிவார்.**

மனிதரின் செய்கைகளைத் தான் நாம் அறிவோம். ஆனால், அவர்களுடைய உள்ளந்திரியங்களை இயேசு அறிவார். நூற்றுக்கதிபதியைப் பொறுத்த வரை, அவனுடைய உலகப்பிர காரமான அதிகாரத்தைக் குறித்து அவன் அறிக்கையிட்டதை வைத்து அல்ல. அவனுடைய இருதயத்தின் நினைவுகளை வைத்தே அவனைப் பற்றி தீர்மானிக்கின்றார்.

***"தேவனுடைய பிரசன்னத்தில் இருக்க தகுதியற்றவர்கள் நாம் என்று ஒப்புக்கொள்வதே" தேவனைக் களிப் படுத்துவதாகும்.*** ஒரு பட்டாளத்தின் தலைவனாக ஒரு படைத்தள பதியாக இருந்தான். ஆனாலும் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக தன்னுடைய நிலையை **"ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல" (மத்தேயு 8:8)** என்று கூறுகின்றான். இரட்சிப்பு தேவைப்படுகின்ற பாவி என்ற தன் நிலையை ஒப்புக்கொள்கின் றான் நாம் நம்முடைய நிலைமையை எப்படி ஒப்புக்கொள்கின்றோம். மனத் தாழ்மையோடும் உண்மை யோடும் தேவனிடத்தில் வரும் போது அப்படிச் செய்கின்றோம்.

**நாம் மனத்தாழ்மையோடும் உண்மையோடும் அவரிடம் வரும் போது நம்முடைய நிலைமையை நாம் ஒத்துக் கொள்ளும் போது நம்முடைய பலவீனங் களை ஒத்துக்கொண்டு நாம் ஒரு பாவி என்று அறிக்கையிடும் போது அற்புதங்கள் ஆரம்பிக்கின்றது.**

**மத்தேயு 8:10 இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசவாசத்தைக்**

**காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.** இயேசு கிறிஸ்து ஆச்சரியப்பட் டார். மனத்தாழ்மை யோடும் உண்மையோடும் உங்கள் பல வீனங்களை மனதார ஒத்துக் கொள்ளும் போது இயேசு ஆச்சர் யப்படு வது மட்டுமல்ல உங்களை மனதுருக்கத்தோடு ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றார்.

திருடவும் கொல்லவும் அழிக்க வும் வருகிற பிசாசின மேலும் அவனுடைய சேனையின் மேலும் இயேசுவுக்கு அதி காரம் உண்டு. நூற்றுக் கதிபதி இயேசுவிடம் சொன் னான், நான் புறம்பான அதிகாரம் உள்ளவன், நீரோ உள்ளான அதிகாரம் உள்ளவர். வெளியில் இருப்பவனை விட நம் மில் இருக்கிறவர் பெரியவர். எனவே நான் அவரிடம் பணிகின் றேன் என்றான்.

ஏன் அதிபதி இயேசு விடம் வந்தான்? பிசாசின் மீது எல்லா அதிகாரமுடைய இயேசுவை தேடிக்கொண்டிருந்ததினால் அவரிடம் வந்தான். படைத்தளபதி யான அவனின் ஆயுதங்கள், யுக்திகள், அதிகாரங்கள், அந்தஸ் துகள், வலிமைகள், ஆளுமைகள் அவனைக் கைவிட்டன. ஆனால் இயேசு கிறிஸ்துவால் மாத்திரமே இது ஆகும் என்று அவன் எண்ணியிருந்தான். அவர் போ என்று சொன் னால் வியாதிகளும், சாபங்களும், வாதைகளும் போய்விடும் என்று அவன் நம்பியிருந்தான்.

**மனத்தாழ்மையோடும், உண்மையோடும் உங்கள் பல வீனங்களை மனதார ஒத்துக் கொள்ளும் போது இயேசு ஆச்சர்யப்படுவது மட்டுமல்ல உங்களை மனதுருக்கத்தோடு ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றார்.**

**மத்தேயு 8:13 பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கட வது என்றார். அந்த நாழிகையிலே அவன வேலைக்காரன் சொஸ்தமானான்.** இயேசுவின் அதி காரம் நேரத்திற்கும் இடத்திற் கும் கட்டுப்பட்டதல்ல. இயேசுவுக்கு தூரம், சமீபம் காலம், உலகம் அதிகாரம் என்ப வைகள் அவரைக் கட்டுப்படுத்த முடியாது.

**அவருடைய வார்த்தை மாம்சமான யாவருக்கும் ஆரோக் கியம் தரும்.**

**அதை இன்றே பெற்றுக் கொள்ள ஆயத்தமா?**

**அதிகாரங்களை ஆளும் ஆண்டவர் உன் வாழ்வில் அதிகாரம் செலுத்த இடம் உண்டானால் உன் நிலை மாறிவிடும். நீ வியாதிகள், சாபங்களை வென்று கொண்டு ஓர் வெற்றி வாழ்வை வாழலாம்.**

**அதற்கு நீங்கள் தயாரா?**

**"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"**

# குறுக்கெழுத்துப்போட்டி – 56

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | ■ | ■ | | 02 | | 03 |
| 04 | 05 | | | | ■ | | | ■ |
| | | ■ | | | | 06 | | ■ |
| | | 07 | | | ■ | | | |
| | | ■ | ■ | ■ | | ■ | | |
| ■ | ■ | | | 09 | | | 08 | |
| 10 | | | | | 11 | | ■ | |
| ■ | ■ | | | | | | | 12 |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். - நன்றி

## இடமிருந்து வலமாக

01. யோர்தானுக்கு கிழக்கேயிருந்த அடைக்கலப்பட்டணங்களில் ஒன்று
04. இவன் யோயாக்கீமின் ஸ்தானத்தில் ராஜாவானான்
07. இஸ்ரவேலின் கடைசி ராஜா
10. இந்தக் குடிகளைத் திகில் பிடிக்கும்



## வலமிருந்து இடமாக

03. இஸ்ரவேலர் இவனை 18 வருடம் சேவித்தார்கள்
06. ஆபத்துக் காலத்தில் ...... நம்புவது உடைந்த பல்லுக்கும் மொழி புரண்ட காலுக்கும் சமானம்
09. மோசே இந்த மலையின் மேலிருந்து சாபத்தைக் கூறும்படி சொன்னார்
12. இவனுக்கு இரண்டு காலும் முடமான மகன் இருந்தான்

## மேலிருந்து கீழாக

02. இவனும் இவனுடைய குமாரத்திகளும் கெபியிலே குடியிருந்தார்கள்
04. இவள் யோவாசைக் களவாய் எடுத்தாள்
05. இவன் கர்த்தருடைய சுத்திர வீதம்



## கீழிருந்து மேலாக

08. இந்த ராஜாவின் கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டன
11. நாவு சாவுக்கேதுவான ............ நிறைந்தது
12. இவனுடைய நாட்களில் ஆசகேல் இஸ்ரவேலை ஒடுக்கினான்

# உன்னை பாராட்ட முடியுமா?



## வேதப்பகுதி: லூக்கா 8:32-36

ராகேஷின் தந்தை கீழ்க்கண்ட விஷயங்களுக்காக அவனை பாராட்டுகிறார்.

ராகேஷ் காலையில் சீக்கிரம் எழுந்து விடுவான். காலையில் ஜெபிக்கவும் வேதம் வாசிக்கவும் தவறமாட்டான். சாப்பிட்ட தட்டை அவனே கழுவி வைப்பான். சாப்பாட்டு மேசையை துடைத்து சுத்தம் செய்வான். தேவையில்லாமல் விளக்கு எரிந்தால் நிறுத்தி விடுவான். வீட்டிலுள்ள பொருட்களை சரியான இடங்களில வைப்பான். அக்கம் பக்கத்து கடைகளில் சென்று பொருட்கள் வாங்கி வருவான். டிவியில் அதிக நேரங்களைச் செலவிடமாட்டான். பிறர் பேசிக் கொண்டிருக்கும் போது அமைதியாயிருப்பான். அப்பா அம்மாவைக் கேட்காமல் எங்கும் போகமாட்டான்.



**உன்னுடைய அப்பா மேற்கண்ட விஷயங்களுக்காக உன்னை பாராட்ட முடியுமா? இல்லையென்றால் இது போன்ற நல்ல பழக்கங்களைப் பழகிக்கொள். கர்த்தரும் உன்னை ஆசீர்வதிப்பார்.**

**சிந்தனைக்கு: நல்லப் பழக்கங்களைப் பழகிக்கொள். கெட்ட பழக்கங்களை விட்டு விலகிச் செல்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்!" – ஆகஸ்ட் 16



# அருட்பணியாளர் சரிதை

## சார்லஸ் தெ ஃபூக்கோ

—1858 – 1916—



## உபசரிப்பில் மகிழ்ச்சி

*தனிமையான தியான வாழ்வில் எனது துறவை ஆரம்பித்த நான் என்னையும் அறியாமல் பிறர் பணியில் மூழ்கியிருக்கக் கண்டு வியப்படைந்தேன். தினமும் இரவு உணவு உண்ணும் சமயத்தில் விருந்தினர் வருகின்றனர். தங்க இடம் கேட்கின்றனர். காலையுணவு நேரத்திலும் விருந்தினர்...... இதற்கு முடிவேயில்லை.*

*சில நாட்களில் இரவிலும் பத்துப் பதினொரு விருந்தினர் வந்து கூடிவிடுகின்றனர். தினமும் அறுபது முதல் நூறு வரை என்னைப் பார்க்க வருகின்றனர். எனது இல்லத்திற்கு காலை 5மணி முதல் 8மணி வரை, மாலை 4மணி முதல் 8மணி வரை மக்கள் வந்து செல்வதால் அது ஒரு தேன்கூடு போல் தோற்றமளிக்கிறது* – இது சார்லஸ் ஃபூக்கோவின் வார்த்தைகள்.

யார் இவர்? பிரான்ஸ் நாட்டில் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்த ஃபூக்கோ, கிறிஸ்துவின் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்து துறவியானார். புனித பூமிக்குத் திருப்பயணம் மேற்கொண்ட இவர், இயேசுவைப் போல் வாழ ஆசை கொண்டார். 1901ம் ஆண்டு தன் மிஷனெரிப் பயணத்தை அல்ஜீரியாவை நோக்கி ஆரம்பித்தார். **துவாரெக் மக்களின் நலனுக்காக கோவில் ஒன்றினை அமைத்து அதன் உச்சியில் ஒரு சிலுவையை நாட்டினார். இதுவே அந் நாட்டின் முதல் திருச்சபை.**

நாடோடியாக வாழ்ந்த துவாரெக் மக்களுக்கு அவர்கள் மொழியிலேயே நற்செய்தியைக் கூறி, மக்களின் வாழ்வை நிலைப் படுத்தினார். துறவு மடத்தையும் ஆரம்பித்தார். தியானங்களையும் எழுத ஆரம்பித்தார்.

**"ஏழைகளின் துணிகளையும் சலவை செய்து கொடு. அவர்கள் தங்கியிருக்கும் இடத்தை சுத்தம் செய். கூடுமானவரை இவற்றையெல் லாம் நீயே செய். பொதுக் கழிவறைகளையும் நீயே கழுவு. பணி செய்யவே வந்தேன் என்ற இயேசுவைப் பின்பற்றி நீ ஒரு பணியாளனாகவே இரு"** என்று கூறிய சார்லஸ் தெ஁பூக்கோ, தன் வாழ்நாளெல்லாம் பணியாள னாகவே வாழ்ந்து "இயேசுவின் சிறிய சகோதரர்கள்" என்ற அமைப்பை உலகிற்கு தந்து உன்னதரிடம் சென்றார்.

**அன்பரே! பிறர்க்குப் பணி செய்வதில் உங்கள் செயல்கள் எப்படி உள்ளது?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இயேசுவின் துன்பத்தில் பங்கு கொண்டால் தான் அவரது இன்பத்தில் பங்கு கொள்ள முடியும் – சார்லஸ் தெ஁பூக்கோ.**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜீலை 02*

# வினாவிடை - 57
# சரியான பதில்கள்



01. யோபு – யோபு 19:6
02. யோசேப்பு – ஆதியாகமம் 45:8
03. யாக்கோபும் யோவானும் – மத்தேயு 4:21
04. எரேமியா – எரேமியா 18:1–6
05. நான்கு – 1நாளாகமம் 6:3
06. எரேமியா – புலம்பல் 1:12–13
07. காற்று – நீதிமொழிகள் 11:29
08. யாபால் – ஆதியாகமம் 4:20
09. மோசே கட்டின ஒரு பலிபீடத்தின் பெயர் – யாத்திராகமம் 17:18
10. சகரியாவுக்கு – சகரியா 1:1,20




## முத்துக்கள்

மறைந்திருக்கும்
பொய்கள்-என்றும்
இரவல்களே

அழகில்லாத ஒன்றுக்குள்ளும்
இருப்பது
கிருபை

உண்மை பேச
முடியாத நிலை
சட்டமே

விழுந்த நிலையில்
எழும்பாதிருப்பது
துன்மார்க்கமே

ஆவிக்குரிய அரிவாரியும்
உயர் அறிவும்
ஜெபமே

வாளும் போல
ஆவிக்குரிய
ஜெபம்

நிஜங்கள் என்றைக்கும்
மறைந்தாலும் உதிக்கும்
சூரியனே

பிசாசை உருக்குலைக்கும்
உயரிய ஆயுதம்
உபவாசம்

ஜெபக் களங்கள்
சபையின்
காவல் நிலையங்களே

சத்தியம் அறிவது
விடுதலைக்கு
வழியே

# குறுக்கெழுத்துப் போட்டி – 55
## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. கிப்ரோத்அத்தாவா
05. ராகாப்
06. தையல்
10. கிபியா
11. இமெநேகோ

**வலமிருந்து இடமாக**

02. சாந்தகுணம்
04. பேயோர்
07. பினேகாஸ்
08. திர்ஷாதா
14. செபோயீம்



**மேலிருந்து கீழாக**

02. சாலமோன்
03. தபேரா

**கீழிருந்து மேலாக**

09. பிசின்தைலம்
11. இக்கபோத்
12. மெகித்தோவில்
13. போத்திபிரா

[redacted]



# வினா விடை – 58

01. பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத இஸ்ரவேலர் எத்தனை பேர்?
02. பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்கு சமானமாயிருப்பவள் யார்?
03. கட்டிலில் ஒரு சுரூபத்தை வைத்து அதை துப்பட்டியினால் மூடி வைத்தவள் யார்?
04. அகாயா நாட்டு அதிபதியின் பெயரென்ன?
05. தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்த விவேகமுள்ள அதிபதி யார்?
06. தன் சகோதரியை விவாகம் பண்ணினவன் யார்?
07. கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்புகிறது என்று சொன்னவர் யார்?
08. கிருபையினால் இரட்சிக்கப்பட்டவர்கள் யார்?
09. கிருபையை போக்கடிக்கிறவர்கள் யார்?
10. பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி யார்?

[redacted]



# படித்ததில் பிடித்தது

ரங்கனிடம் சில ஆடுகளும் ஒரு நாயும் இருந்தது. தினமும் அவன் ஆடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வன். கூடவே அவனது நாயும் செல்லும். மர நிழலில் ரங்கன் படுத்துறங்க ஆடுகள் புல் மேயும். அந்த ஆடுகளை ஓநாய் போன்றவை அணுகாமல் நாய் காக்கும். ரங்கன் தூங்கி எழுந்ததும் தான் சாப்பிட்டுவிட்டு நாய்க்கும் சாப்பாடு அளிப்பான். இது ஆடுகளுக்கு பிடிப்பதில்லை. ஒரு நாள் ஆடுகள் ரங்கனிடம் நாங்கள் உனக்குப் பால் தருகின்றோம். நீ உயிர்வாழ உதவுகின்றோம். ஆனால் நீயோ எங்களை நாங்களாவே மேயவிட்டு விட்டு சும்மாயிருக்கும் நாய்க்கு உணவளிக்கின்றாயே என்றன.

அப்போது ரங்கன் ஆடுகளிடம் நீங்கள் சொல்வது சரி, ஆனால் சற்று சிந்தித்துப் பாருங்கள்; இந்த நாய் நீங்களெல்லாம் மேயும் போது உங்களைப் பார்த்துக் கொள்ளாவிட்டால் ஓநாய் வந்து தினமும் உங்களில் ஒருவரை கொண்டு சென்று உணவாக்கிக் கொள்ளும். அப்படி நேராமல் உங்கள் உயிரை இந்த நாய் காக்கிறது என்றான். ஆடுகளும் சிந்தித்துப் பார்த்துவிட்டு நாயின் முக்கியத்துவத்தை உணர்ந்தன.

இதைப் போலவே, நம்மையும் நமது குடும்பத்தையும் வழி நடத்தும் மேய்ப்பரை நான் ஏன் தாங்க வேண்டும் என்று தவறான சிந்தனைக்கு வழி வகுக்காதீர். ***நம்மை ஓநாய்கள் தூக்கிச் சென்றுவிடாமல் எச்சரித்து, வேதத்தை போதித்து வழிநடத்துவோர் முக்கியமானவர்களே என்று உணர்வோம். நீயே ஆலயம்; உனக்கேன் ஆலயம்?*** போன்ற வஞ்சனைகள் செய்வோரோடு இணங்காமல் தேவ சபையில் ஐக்கியம் கொள்ளுங்கள். ***போதகரைக் குறித்து குறை பேச அல்ல; தேவனை மகிமைப்படுத்தவே ஆலயம் செல்கிறோம்*** என்பதனை உணர்ந்து செயல்படுவோம். எல்லாவற்றுக்கும் மேலாக உங்களை நடத்தும் போதகரைக் குறித்து நன்றியறிதல் உள்ளவர்களாய் இருப்போம். நன்றியற்ற தன்மை இதுவரை இருந்த வாழ்வின் பசுமைத் தன்மையை தின்றுவிடும்.

**1தீமோத்தேயு 5:17-18 (17.) நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். 18. போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே.**

பயன் பெற்ற ஓர் வாசகர்

ooo




**சங்கீதம் 119:18 உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.**

இது தாவீது ஜெபிக்கின்ற ஜெபமாய் இருக்கின்றது. பல நேரத்தில் அவிசுவாசிகளுடைய மனக்கண்கள் சத்தியத்தை அறியும்படி திறக்கப்படட்டும் என்று நாங்கள் ஜெபிப்பதுண்டு. கண்கள் குருடாக்கப்படுவது அவிசுவாசிகளுக்கு மட்டும் தான் என்று சில விசுவாசிகள் நினைக்கின்றார்கள்.

**தேவனோடு நடந்த மனிதன், தேவனுடைய இருதயத்திற்கு பிரிய மானவன், தேவனுக்காய் காரியங் களை செய்தவன், தேவனுடைய வேதத்தை நேசித்தவன் கூறுகின் றான்; என் கண் களைத் திறந்தருளும் ஆண்டவரே!.** பல நேரங்களில் விசுவாசிகளாய், ஊழியர்களாய் இருக்கவேண்டியவர்களுடைய கண்களை தேவன் திறக்க வேண்டியிருக்கின்றது.

**பரிசுத்த வேதாகமத்தில் நான்கு பேருடைய கண்களை தேவன் திறந்தார். அப்படி திறக்கப்பட்ட பொழுது அவர் களுடைய வாழ்க்கை, சூழ்நிலை கள் தலைகீழாக மாறியதை நாம் காண முடியும். எனவே கண் களைத் திறந்த அந்த நான்கு பேரைப் பற்றியும் தொடர்ந்து ஆராய்ந்து பார்ப்போம்.**

# ஆகார்

**ஆதியாகமம் 21:9-19** ஆகார்
ஒரு காலத்தில் ஆபிரகாமின்
வேலைக்காரியாய் இருந்தவள்.
ஆபிரகாம் - சாராள் தங்களுடைய
வாழ்க்கையில் இருக்கின்ற தேவ
திட்டத்தை முழுமையாய் விசுவாசிக்க
கூடாத போது, புரிந்து கொள்ளா
மல் இருந்த போது மனுஷீகத்திலே
செயற்பட்டு அடிமையாய் இருந்த
பெண்ணாகிய ஆகாரை ஆபிரகாமின்
மனைவி என்ற ஸ்தானத்திற்கு கொண்டு
வருகின்றார்கள். அவள் மனைவி
யாய் இருக்கின்ற காலத்தில் ஆபிரகாம்
மூலமாய் தேவன் அவளை கடாட்
சிக்கின்றார். அப்பொழுது அவள்
கர்ப்பவதியானாள். ஆகார் ஆபிரகா
முக்கு ஒரு குமாரனைப் பெற்றெடுக்
கின்றாள். இப்பொழுது அடிமைப்
பெண்ணின் குமாரன் ஆபிரகாமின்
பிள்ளையாய் சாராளினால் வளர்க்கப்
படுகின்றான். அந்த வீட்டிலே சகல
ஆசீர்வாதங்களோடும்கூட அந்தப்
பிள்ளை வளர்ந்தது. **ஆனால் தேவனுடைய
வாக்குத்தத்தின்படி இந்த பிள்ளை பிறந்த
தல்ல. அப்படியிருந்தும் அந்தப் பிள்ளையை
தேவன் அங்கீகரித்து ஏற்றுக் கொள்கின்றார்.**

ஆனால் இப்பொழுது
சாராளுக்கு வாக்குத்தத்தின்படி
பிள்ளை பிறக்கின்றது. அவனுக்கு
ஈசாக்கு என்று பெயர் வைக்கின்றார்
கள். இந்த பிள்ளை பிறக்கும் வரைக்கும்
இஸ்மவேல் தான் செல்லப்பிள்
ளையாக இருக்கின்றான். அது
வரைக்கும் இஸ்மவேல் என்ன செய்
தாலும் அது சாராளுக்கு பெரிதாக
தெரியவில்லை. ஆனால் இன்றைக்கு
தனக்கென்று ஒரு பிள்ளை பிறந்து
வளர்ந்துவிட்டது. இப் பொழுது
இஸ்மவேல் ஈசாக்கை பரியாசம்
பண்ணு கின்றான். குடும்பத்தில் இரண்டு
பிள்ளைகள் இருந்தால் ஒருவரை ஒருவர் பரியாசம்
பண்ணுவது வழமை. இங்கே ஈசாக்கை
பரியாசப்பண்ணி யதை சாராளால்
பொறுத்துக் கொள்ள முடிய
வில்லை. சாராள் ஆபிரகாமிடத்தில
போய் இந்த வீட்டிலே ஆகாரும்
அவள் குமாரன் இஸ்மவேலும்
இருக்கக்கூடாது, அவர்களை வெளி
யேற்ற வேண்டும் என்று குற்றம்
சுமத்தினாள். இந்த காரியம்
ஆபிரகாமுக்கு வருத்தமாயிருந்
தாலும் ஆண்டவர் சொல்கின்றார்,
அந்தப்பிள்ளையையும் ஆசீர்வதிப்
பேன், நீ சாராள் சொல்கின்றதைக் கேள்
என்றார். **ஆபிரகாம் தேவனுடைய
வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவனாய் அவர்கள்
இருவரையும் அதிகாலையில் எழுந்து ஒரு
துருத்தியில் தண்ணீரும் அப்பமும்
கொடுத்து அனுப்பி வைக்கின்றான்.**

அவள் தன் பிள்ளையுடன்
வனாந்தரத்தை சுற்றி அலைந்து
கொண்டிருக்கின்றாள். இவ்வாறு
அவள் அலைந்து கொண்டிருக் கும்
போது அவளிடம் இருந்த தண்ணீர்
அனைத்தும் செலவழிந்து போகின்
றது. பிள்ளை இப்பொழுது அவளைப்
பார்த்து நான் தாகமாயிருக்கின்
றேன், எனக்கு தண்ணீர் வேண்டும்
என்று கூறுகின்றான். இஸ்மவேல்
14 – 17 வயதுள்ள இளம் வாலி
பனாய் இருந்தான். **ஏற்கனவே ஆகார்
சாராளின் கொடுமை தாங்க முடியாமல்
வீட்டை விட்டு ஓடிய போது ஏற்கனவே
வாக்குத்தத்தம் கொடுத்து விட்டார்.
வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொண்ட
வள் தன் பிள்ளையின் எதிர்காலத் தைக்
குறித்து, அவன் ஆசீர்வாதமாய் இருப்
பான் என்று சொல்லிய வார்த்தை களையும்
பெற்றுக் கொண்டவள், ஆனால் அவள்
வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொண்டா
லும் அந்த வாக்குத்தத்தங்களை எல்லாம
மறந்து போனவளாய், தேவன் சொன்ன
வைகளை நிறைவேற்**

**றுவார் என்பதனை மறந்து போனாள்.** அந்த வாக்குத்தத்தங்களை கொடுத்த தேவனை மறந்து போனவளாய், இன்றைக்கு தண்ணீர இல்லாமல் பிள்ளை கஷ்டப்பட்டு மரித்து விடும் என்று ஓர் இடத்தில் இருந்து அழுது கொண்டிருந்தாள் என்று வேதம் சொல்கின்றது.

**இந்த ஆகாரினாலே தேவனைப் பார்க்க முடியவில்லை, தன்னுடைய சூழ்நிலைக்கூடாக தேவனுடைய வாக்குத்தத்தங்களை பார்க்க முடியவில்லை, தேவன் பிள்ளைக்கு கொடுத்த வாக்குத்தத்தின் எதிர்காலத்தை பார்க்க முடியவில்லை; இந்த ஆகார் பிள்ளை மரிக்கப்போகின்றதென்பதனைப் பார்த்தாள்.** தன் பிள்ளையின் முடிவைப்பார்த்தாள். தன் வாழ்க்கையில் இருக்கின்ற ஒரேயொரு பிடியை இழக்கப்போகின்றேன் என்பதனை மாத்திரம்தான் அவளால் பார்க்க முடிந்தது. பல வேளைகளில் பலவிதமான சூழ்நிலைகளுக்குள்ளாய் கடந்து போகின்ற நானும், நாங்களும் சூழ்நிலைகளுக்குள்ளாய் சிக்கிக்கொள்கின்றவர்களாய் இருக்கின்றோம். தரிசனங்களை, வாக்குத்தத்தங்களை மறந்து விடுகின்றோம். ***ஊழியக்காரர்களாய் இருப்பதனால் வாழ்க்கையில் இருக்கின்ற எல்லா சூழ்நிலைகளிலும் பரிபூரணமுள்ளவர்களாய் இருந்துவிட முடியாது. நம்முடைய வாழ்க்கையிலும் குறைவுகள் இருக்கின்றது. நம்முடைய வாழ்க்கையிலும் பயங்கள் இருக்கின்றது. சில நேரங்களில் அவிசுவாசங்கள் தலைதூக்க ஆரம்பிக்கின்றது, பல வேளைகளில் சந்தேகங்களும் எழத்தான் செய்கின்றது.***

தேவனுடைய வாக்குத்தத்தங்களை பிடித்திருக்க வேண்டிய பெண், தேவன் தனக்கு கொடுதத தரிசனத்தைப் பற்றிப்பிடித்துக் கொள்ள வேண்டிய பெண், தேவன் தன்னுடைய வாழ்க்கையிலே எல்லாம் நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டிய பெண் இன்றைக்கு மரணத்தையும், முடிவையும் அழிவையுமே அவளால் பார்க்க முடிந்தது. **நீங்களும் நானும் ஆராதிக்கின்ற தேவன் சூழ்நிலைகளினால் மாற்றப் படுகின்ற தேவன் அல்ல; அவற்றால் பாதிக்கப் படுகின்ற தேவனும் அல்ல.** ஆதியாகமம் 21:17ல் பார்க்கின்றோம்; பிள்ளையின் பக்கத்திலே தகப்பன் இல்லை, பிள்ளையின் பக்கத்தில் அவனை வளர்த்தெடுத்த சாராள் இருக்கவில்லை. அத்துடன் அவனைப் பெற்றெடுத்த ஆகார் இருக்க வில்லை. **ஆனால் தேவன் பிள்ளை யின் சத்தத்தைக் கேட்டார். அவன் சத்தத் தைக் கேட்க அவனுக்கு அருகில் யாரும் இருக்கவில்லை. ஆனால் அவனை உருவாக்கிய பரலோக தேவன் அவனைத் தெரிந்தெடுத்த, அழைத்த தேவன் அவனுக்கு வாக்குத்தத்தைக் கொடுத்த தேவன் பிள்ளையின் சத்தத்தை கேட்டார்** என்று வாசிக்கின்றோம்.

**ஆதியாகமம் 21:17 (17) தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார். தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு: ஆகாரே. உனக்கு என்ன சம்பவித்தது. பயப்படாதே. பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார். 18. நீ எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையினாலே பிடித்துக் கொண்டுபோ. அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.** தேவன் ஆகாரைச் சந்தித்தார். வாக்குத்தத்தம் திரும்ப வருகின்றது, ஆனால் பிள்ளை தண்ணீருக்காய் மடிந்து கொண்டிருக்கின்றது, ஆண்டவர் கூறுகின்றார்: பிள்ளையை கரத்தில் எடுத்துக் கொண்டு போ. பிள்ளையை கொண்டு போவதற்கு அவளுக்கு பெலன் இல்லை. ஆனால் அங்கே **தேவன் அவள் கண்களைத் திறந்தார்.** அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்

துரவைக் கண்டுபோய் துருத்தியிலே தண்ணீர் நிரப்பி பிள்ளைக்கு குடிக்கக் கொடுத் தாள். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் வருகின்ற போது அவர்கள் தண்ணீர் தாகத் தினால் இருக்கின்ற போது ஆண்டவா மோசேயிடம் உன் கோலை எடுத்து மலையின் மீது அடி என்று சொல்லி அங்கே ஊற்றை உருவாக்கினார்.

**ஆனால் ஆகாரின் விஷயத்திலே ஆண்டவர் ஊற்றை உருவாக்கவில்லை. மாறாக ஆகாருக்கும் அவன் குமாரனாகிய இஸ்மவேலுடைய ஜீவனுக்கும் தேவை யான ஊற்று அங்கே தான் இருந்தது. ஆனால் தன் வாழ்க்கைக்கு தேவையான ஆசீர்வாதம், பிள்ளைக்கு தேவையான தண்ணீர் அங்கே தான் இருக்கின்றது என்பதனை அவள் அறியாமல் இருந்தாள்.** ஏனென்றால் அவளுடைய கண்கள் மறைக்கப்பட்டு இருந்தது. **இவ்வளவு நேரமும் அழிவையும், மரணத்தையும், வாழ்க்கையில் எல்லாம் முடிந்து போன தென்பதையும் பார்த்த அவளுடைய கண்கள் திறக்கப்பட்டவுடனேயே அவளுடைய வாழ்க்கைக்குத் தேவையான அசீர்வா தங்களைப் பார்த்தாள்.** பல நேரங் களில் எங்களுடைய பிரச்சினை களுக்குரிய பதில்எங்களுக்கு அருகில் தான் இருக்கின்றது. எங்களுடைய வாழ்க்கைக்குரிய ஆசீர்வாதங்கள் அருகில் தான் இருக்கின்றது. ஆனாலும் எங்களால் அதனைக் கண்டு கொள்ள முடியவில்லை. சிலர் தமது மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டே அதனைக் காணவில்லை என்று தேடுவார்கள். இது போலத்தான் காரியங்கள் அருகில் இருக்கின்றது, ஆனால் மனிதன் தேடுகின்ற வனாய் இருக்கின்றான். அருமை யானவர்களே, **ஆகாருக்காக தேவன் துரவை உண்டாக்கவில்லை. அவர் செய்ததெல்லாம் அவளுடைய கண்களைத் திறந்தார். அவள் ஆசீர்வா தத்தைக் கண்டு கொண்டாள்.** நீங்களும் நானும் பிரச்சினைகளுக் கூடாக கடந்து செல்லும் போது எங்களு டைய கண்கள் திறக்கப்பட வேண்டும். ***சில நேரங்களில் என்ன செய்வது?, எங்கே செல்வது?, எங்கே என்னுடைய ஆசீர்வாதம் இருக்கின்றது?, எங்கே என்னுடைய பிரச்சினைக்குரிய பதில் இருக்கின்றது?*** என்று தெரியாமல் இருக்கின்றோம். தேவன் எங்களுக் காக ஆயத்தம் பண்ணியிருப்பது எமக்கு அருகில் தான் இருக்கின்றது. பிரச்சினை தேவனிடத்தில் இல்லை, மாறாக பிரச்சினை எங்களில் தான் இருக் கின்றது. **எங்களுடைய மனக் கண்கள் அடைக்கப்பட்டிருக்கிறதினாலே எங்களாலே தேவனுடைய ஆசீர்வாதங் களைப பார்க்க முடியவில்லை.**

**ஆதியாகமம் 21:19 <u>தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார்.</u> அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு, போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள்.** நம்முடைய பெலத்தி னாலே, ஞானத்தினாலே, முயற்சி யினாலே நாம் அடைய முடியாத ஆசீர்வாதங்கள், நன்மை களை நாம் பெற்றுக் கொள்ள முடியாத பதில்களை தேவன் எங்களுடைய கண்களைத் திறந்து கொடுப்பா ரென்றால் அதனை நாம் சுதந்தரித் துக் கொள்ள முடியும். எத்தனையோ விசுவாசிகள், ஊழியக்காரர் தங்கள் சொந்த முயற்சியினாலே ஆசீர்வா தங்களையும், பதில்களையும் எதிர் பார்ப்பார்கள். ஆனால் ஆண்டவர் உங்களுடைய கண்களைத் திறந்து கொடுப்பாராக இருந்தால் அலைய வேண்டிய அவசியமில்லை, நமக் கும் தேவனுடைய ஆசீர்வாதத் திற்கும் இடையில் உள்ள தூரம்

அதிக தொலைவில் இல்லை. தேவன நம்முடைய கண்களைத் திறக்கும் நேரத்தில் எம்மால் அதனைக் காண முடியும். என்னுடைய, உங்களுடைய ஆசீர்வாதங்களை, வாக்குத்தத்தங் களை சுதந்தரிப்பதற்கு நேராய் நடத்துவதற்கு ஆண்டவர் போதுமானவராய் இருக்கின்றார்.

# பிலேயாம்

**எண்ணாகமம் 22:3 ஜனங்கள் ஏராளமாயிருந்தபடியினால், மோவாப் மிகவும் பயந்து, இஸ்ரவேல் புத்திரரினி மித்தம் கலக்கமடைந்து.** இந்த ஜனங் கள் என் தேசத்தில் வந்தால் என்னையும் மேற்கொண்டு விடு வார்கள். ஆகவே என்னுடைய படை பலத்தினாலேயோ என்னி டத்தில் இருக்கின்ற ஆயுதங்களி னாலேயோ இந்த ஜனங்களைச் சந்திக்க முடியாது. ஆகவே அவன் போடும் திட்டம் **எண்ணாகமம் 22:5-6 (5.) அவன் பேயோரின் குமார னாகிய பிலேயாமை அழைத்துவரும்படி, தன் சந்ததியாருடைய தேசத்தில் நதியரு கேயுள்ள பெத்தூருக்கு ஸ்தானா பதிகளை அனுப்பி: எகிப்திலிருந்து ஒரு ஜனக்கூட்டம் வந்திருக்கிறது; அவர்கள் பூமியின் விசாலத்தை மூடி, எனக்கு எதிரே இறங்கியிருக்கிறார்கள். 6. அவர்கள் என்னிலும் பலவான்கள்; ஆகிலும், நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப் பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்ட வன் என்று அறிவேன்; ஆதலால், நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தைச் சபிக்கவேண்டும்; அப்பொழுது ஒருவேளை நான் அவர்களை முறிய அடித்து, அவர்களை இத்தேசத்திலிருந்து துரத்தி விடலாம் என்று சொல்லச்சொன்னான்.** மூப்பர்கள் பிலேயாமை கூட்டி வரும்படியாய் பணம் கொடுத்து அனுப்புகின்றார்கள். அப்பொழுது அவர்கள் பிலேயாமிடம் வந்து இஸ்ரவேல் ஜனங்களை சபிக்க வரும்படி அழைக்கின்றார்கள்.

அப்பொழுது பிலேயாம் சொல்லுகின்றான்: ***இன்றிரவு ஆண்ட வரிடம் காத்திருந்து அவர் என்ன சொல்கின்றாரோ அதைச் செய்வேன் என்றான்.*** சிலவேளை நாங்கள் ஜெபிக்காமல் காரியங் களைச் செய்கின்றோம். ஒவ்வொரு இரவும் தேவன் பேசும்படியாய் அவரு டைய பாதத்தில் காத்திருங் கள். அப்பொழுது பிலேயாமுக்கு யெகோவா தேவன் கூறுகின்றார்: ***நீ அவர்களோடு போக வேண்டாம்.*** அப்பொழுது பிலேயாம் மோவாபின் மூப்பர் களிடம் வந்து; ***நான் உங்களுடன் வருவதற்கு தேவன் அனுமதி கொடுக்கவில்லை எனவே நீங்கள் போய் விடுங்கள்*** என்று அவர்களை அனுப்பி விடுகின்றான். ஆனால் பாலாக் திரும்பவுமாக பணத் தையும் வெள்ளியையும் கொடுத்து திரும்ப பிலேயாமோடு பேசும்படி மூப்பர்களை அனுப்பு கின்றான். அப்பொழுது மீண்டும் ***பிலேயாம் அவர்களை இன்றிரவு இங்கே தங்குங்கள், தேவன் என்ன சொல்கின்றார் கேட்கின்றேன்*** என்றான். நல்ல மாட்டிற்கு ஒரு சூடு... என்று தமிழிலே அழகான பழமொழி இருக்கின்றது. **தேவன் ஏற்கனவே அவனுக்கு சொல்லி விட்டார் அவர்களுடன் செல்லவேண்டாம்.** மனம்மாற தேவன் மனுபுத்திரன் அல்ல. ஆனால் இங்கே பிலேயாம் வெள்ளியையும் பொன்னையும் பார்த்தவுடன் மனம்மாறுகின் றான். ஒருவேளை தேவன்இன்றைக்கு மாற்றி போகும்படி சொல்வார் என்று நம்பி அவன் மீண்டும் மீண்டும் ஆண்டவரிடம் கேட்ட போது ஆண்டவர் சொல்கின்றார்: ***சரி போ*** என்றார்.

**சிலவேளைகளில் தேவன் சொல்லியும் ஒரு காரியத்தை மீண்டும், மீண்டும் கேட்பால் ஆண்டவர் அதைத்தருவார்.**

இதே போலத்தான் போகாதே என்று சொன்னார். ஆனால் அவன் மீண்டும் மீண்டும் கேட்ட போது போ ஆனாலும் நான் என்ன கூறுகின றேனோ அதைத் தான் சொல்ல வேண்டும் என்றார். ஆகவே மோவாபின் மூப்பர் களோடு பிலேயாம் செல்கின்றான். அவன் செல்கின்ற போது தேவதூதன் உருவின பட்டயத்தோடு அவனுக்கு முன்பாக கழுதையின் முன்பாக நின்றான். சிலர்; ஆண்டவர் தானே போகச்சொன்னார், அப்புறம் ஏன் தேவதூதன் உருவின பட்டயத்தோடு நிற்கின்றான் என்று கேட்பார்கள். பிலேயாமுடைய வழிகள் தாறுமாறாய் போயிற்று. இந்த தீர்க்கதரிசிக்கு தேவன் யார் என்று தெரியும். அவர் பேசினால் எப்படி பேசுவார் என்றும் தெரியும். ஆனால் அவன் தங்கத்தையும் வெள்ளியையும் பார்த்து ஆசைப் பட்டு அதனைத் தேடிச் செல்கின்றான். அவன் இவ்வாறு செல்லும் போது உருவின பட்டயத்தோடு நின்ற தேவதூதனைக் கண்டு கழுதை செல்ல மறுக்கின்றது. இவன் போகச்சொன்ன வழியிலே கழுதை செல்லவில்லை. அது வழிவிலகிப்போகின்றது.

இங்கே இருக்கின்ற அவல நிலை என்னவென்றால், கழுதை தேவதூதனைக் கண்டது. பிலேயாமால் தேவதூதனைக் காணமுடியவில்லை. தேவ சத்தத்தை தேவ திட்டத்தை அறிந்த மனுஷன். ஆனால் என்றைக்கு அவனுடைய வழி தாறுமாறாய் போனதோ அன்றைக்கு அவனால் உருவின பட்டயத்தோடு நின்ற தேவ தூதனைக்காண முடியவில்லை. கழுதை தேவதூதனைக் கண்டு பயந்து இந்தப்பக்கம் அந்தப்பக்க மாய் விலகியது. இதனால் பிலே யாமின் காலில் அடிபட்டது. அவனுக்கு கோபம் வந்தது. தன்னுடைய பிரம்பை எடுத்து கழுதையை அடிக்கின் றான். அடிக்கின்ற போது கழுதை வாயைத் திறந்து பிலேயாமை நோக்கி ஏன் இந்த மூன்று முறை என்னை அடித்தாய் என்று கேட்டது. தேவதூதனைப்பார்க்க முடியா திருந்த இந்த தீர்க்கதரிசி கழுதை யோடு பேசிக் கொண்டிக்கின் றான்.

கர்த்தரின் சத்தத்திற்கு எந்த மனிதன் தன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படியவில்லையோ அவனுடைய வாழ்க்கையில் கழுதையின் சத்தங்கள் தான் கேட்கும். தேவமனிதனுடைய வழி – தேவ சத்தம் கேட்ட தீர்க்க தரிசியினுடைய வழி தவறாய் போகின்றது. தேவ திட்டத்தை நன்றாய் அறிந்திருந்தவனுடைய வழி பாவத்திற்கு நேராய், தீங்கிற்கு நேராய், மாம்சத்திற்கு நேராய் மாற்றப் பட்டு போகுமென்றால் அவன் அவல நிலைக்குள் கடந்து செல்ல நேரிடும். அவிசுவாசி தவறு செய்து கெட்டுப போவதைப் பார்க்கிலும் விசுவாசிகள் அதிகமாய் தவறு செய்து கெட்டுப் போகின்றார்கள். ஒரு வீட்டிலே ஒரு சின்னப்பையனும், பெரிய பையனும் இருந்து தவறு விடுகின்ற போது சின்னப்பையனைப் பார்க்கிலும் பெரிய பையனுக்கே அதிகமான தண்டனை கொடுப்போம். அது போலவே ஊழியக் காரர் தவறுவிடும் போது ஏற்படும்.

ஆகவே தேவ சத்தத்தைக் கேட்ட பிலேயாமுடைய வாழ்க்கை அவல நிலையாய் மாறியது. தேவ சத்தத்தைக் கேட்ட மனுஷன் உருவின பட்டயத்தோடு நின்ற தூதனைக் காண முடியாதபடி அவனுடைய கண்கள் குருடாக் கப்பட்டிருந்தது. இந்த மனுஷன் தங்கத்தையும், வெள்ளியையும் இச்சித்து என்றைக்கு தேவ சித்தத்தை விட்டு விலகுவதற்கு தீர்மானித் தானோ அன்றைக்கு அவன் தன்னு டைய ஆவிக்குரிய வாழ்க்கையில் கீழான நிலைமைக்குள்ளாய் போய்விட்டான்.

**எண்ணாகமம் 22:31 அப்பொழுது கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்தார்; வழியிலே நின்று உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனை அவன் கண்டு. தலைகுனிந்து முகங்குப்புற விழுந்து பணிந்தான்.** அவனுடைய கண்கள் திறக்கப்பட்டது. **எண்ணாகமம் 22:32 கர்த்தருடைய தூதனானவர் அவனை நோக்கி: நீ உன் கழுதையை இதனோடே மூன்று தரம் அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால், நான் உனக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன்.** கர்த்தர் அவனைப் போகச் சொன்னார். ஆனால் அவனுடைய வழி மாறுப்படிருந்ததைத் தேவன் கண்டார்.

வழிமாறுபட்டது மாத்திரமல்ல இருதயம் மாறுபட்டது. *கழுதை என்னைக் கண்டு இந்த மூன்று தரம் விலகிற்று. கழுதை விலகாமல் இருந்திருந்தால் நான் உன்னைக் கொன்று போட்டு கழுதையை உயிரோடு வைத்திருப்பேன்.* தீர்க்கதரிசியாய், இரட்சகனாய் இருக்க வேண்டிய மனுஷனை கழுதை காப்பாற்றியது. வாழ்க்கையில் வழிகள் மாறுபடுகின்ற போது இப்படிப்பட்ட அவலநிலை உருவாகும். கொல்லப்பட இருந்தவனை கழுதை தான் காப்பாற்றியது என்பது கூட அவனுக்குத் தெரியவில்லை. கண்கள் குருடாக்கப்பட்டவனாய் போனான். *அப்பொழுது பிலேயாம் கர்த்தருடைய தூதனை நோக்கி நான் பாவம் செய்தேன், வழியிலே நீர் எனக்கு எதிராய் நிற்கிறதை அறியாதிருந்தேன். இப்பொழுதும் உம்முடைய பார்வைக்கு தகாததாய் இருக்கும் என்றால் நான் திரும்பி போய்விடுகிறேன்.* கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமை நோக்கி *அந்த மனிதனோடு கூட போ, நான் உனக்கு சொல்வதை மாத்திரம் நீ சொல்ல வேண்டும்* என்றார்.

எதற்காக கண்கள் திறக்கப்பட்டது? ஆகாருடைய கண்கள் அவளுடைய ஆசீர்வாதங்களைக் காணும்படியாய் திறக் கப்பட்டது. அவளுடைய எதிர்கால வாழ்க்கைக்கு தேவையானதைப் பெற்றுக் கொள்வதற்கு கண்கள் திறக்கப் பட்டது. ஆனால் பிலேயா முக்கு தேவனுடைய வழியில் நடப்பதற்கு, தேவசித்தம் செய்வதற்கு அவனுடைய கண்கள் திறக்கபபடுகின்றது. ஒரு பரிசுத்த, கீழ்ப்படிவுள்ள, தேவ சித்தத்தை நிறைவேற்றுகின்ற வாழ்க்கைக்கு அவனுடைய கண்கள் திறக்கப்பட்டிருக்க வேண்டும். இன்றைக்கு நாம் நிர்ப்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் தேவனுடைய கிருபையாயிருக்கிறது. நாங்கள் ஜெபம் பண்ணுவதால், அல்லது உபவாசம் இருப்பதால் தான் நன்றாயிருக்கின்றோமா? இல்லை எல்லாமே தேவனுடைய சுத்த கிருபை யாயிருக்கின்றது. **தேவன் எங்களோ டிருந்து நாம் நடக்க வேண்டிய வழியிலே நம்மை கரம்பிடித்து நடத்தா விட்டால் நம்முடைய வாழ்க்கை நிர்மூலமாகி விடும்.** எம்முடைய அறிவோ, திறமையோ, வைராக்கியமோ எங்களைக் காப்பாற்றாது. தேவன் எங்களுடைய கண்களைத் திறந்து நாம் நடக்கின்ற வழி சரியா, பிழையா என்று காட்டா விட்டால் நாம் விழுந்து விடுவோம்.

இறுதியாக பிலேயாம் கூறுகின்றான்; கண் திறக்கப்பட்ட வன் விளம்புகிறதாவது என்கின்றான. எனவே பிரியமானவர்களே, எங்களு டைய வாழ்க்கையிலும் சில பகுதிகளில எமது கண்கள் திறக்கப்பட வேண் டியது அவசியமாயிருக்கின்றது.

தொடரும்.....

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!**

**போதகர் சம்பத்**
உபதலைவர்,
சென்னை **AG** வேதாகம கல்லூரி,
இந்தியா.

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள்
உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 PerYear |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் :-..........................................................

விலாசம் :-..........................................................

..........................................................

..........................................................

..........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.

To:..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................